97

297.1.28.

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமானுஜாய நம: [illegible]ரார்தூப்புல் திருவேங்கடமுடையான் திருவடிகளே ஶரணம்.

ஸ்ரீமந்நிகமாந்த மஹா தேசிகன் அருளிச்செய்த

ஸ்ரீமத் தத்வபதவீ

ஸ்ரீமத் ரஹஸ்யபதவீ

REGISTRAR OF BOOKS
9 JAN 1928
MADRAS

இவை

திருவஹீந்திரபுரம் சேட்லூர் வித்வான் பகவத்விஷயம்

பண்டித பூஷணம் மஹாமஹோபாத்யாய

ஸ்ரீ.உப. வே. நரஸிம்மாசார்யர் ஸ்வாமியினால்

ஸகலரும் ஸுலபமாய் அறிந்து உஜ்ஜீவிப்பதற்காக மிகவும் எளிதான
தமிழ் நடையில் எழுதப்பெற்று

ஸ்ரீரங்கம் ராயகுரு கோடிகன்னிகாதானம் ஏழு திருமாளிகை
ஸ்ரீ. உப. ஐயா யாமுனதாதாசார்யரால்
பரிஶோதிக்கப்பட்டு

ஸ்ரீரங்கம் ஸ்ரீவேதாந்ததேஶிக விலாஸம் என்கிற வித்யாபிவ்ருத்தி ஸபை
மானேஜரான ஸ்ரீமான் மாராடி ரே. பாபுரெட்டி என்கிற
[illegible]ிக ராமானுஜதாஸரால் ப்ரசுரம் செய்யப்பட்டது.

[illegible]ல் பிரஸ், சென்னை.

1927. [காபிரைட் ரிஜிஸ்டர்டு.] [தபாற்கூலி வேறு.

Q22
N22.
183664

ஸ்ரீ:

சீரார்தூப்புல் திருவேங்கடமுடையான் திருவடிகளே சரணம்.

ஸ்ரீமந்நிகமாந்த மஹா தேஶிகன் அருளிச்செய்த

ஸ்ரீமத் தத்வ பதவிக்கு

திருவஹீந்திரபுரம் சேட்லூர் வித்வான் பகவத்விஷயம்

பண்டித பூஷணம் மஹாமஹோபாத்யாய

ஸ்ரீ உப. வே. நரஸிம்மாசார்யர் ஸ்வாமியின்

தமிழ் மொழிபெயர்ப்பு.

ஸ்ரீமாந் வேங்கடநாதார்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேதாந்தாசார்யவர்யோ மே ஸந்நிதத்தாம் ஸதா ஹ்ருதி ॥

ராமாநுஜதயாபாத்ரம் ஜ்ஞாநவைராக்யபூஷணம் ।
ஸ்ரீமத்வேங்கடநாதார்யம் வந்தே வேதாந்ததேஶிகம் ॥

சீரொன்று தூப்புல் திருவேங்கடமுடையான்
பாரொன்றச் சொன்ன பழமொழியுள்—ஓரொன்று
தானேயமையாதோ தாரணியில் வாழ்வார்க்கு
வானேறப் போமளவும் வாழ்வு.

ப்ரஸாதாத்தேஶிகேந்த்ராணாம் பராவரவிபாகவித் ।
ப்ரணத: பரமாத்மாநம் ப்ரப்ரவீதி பரம் பதம் ॥

[ப - ரை] தேஶிகேந்த்ராணாம் - ஆசார்யர்களினுடைய, ப்ரஸாதாத் - அனுக்ரஹத்தினால், பராவரவிபாகவித் - பரதத்வம் அவர தத்வம், அதாவது உயர்ந்த வஸ்து தாழ்ந்த வஸ்து இவைகளின் பிரிவைத் தெரிந்து கொண்டவனாய், பரமாத்மாநம் - உயர்ந்த

தத்வமான பரமாத்மாவை, ப்ரபந்ந: - ப்ரபத்தி செய்தவன், பரமம்பதம் - உயர்ந்த பதத்தை, அதாவது மோக்ஷத்தை, ப்ராப்நோதி - அடைகிறான்.

ஶாஸ்திரங்களில் ஆசார்ய லக்ஷணங்களாகச் சொல்லப்பட்டிருக்கும் எல்லாக் குணங்களையும் உடையவர்களான ஆசார்யர்களுடைய அனுக்ரஹத்தினால் (க்ருபையினால்) உயர்ந்த வஸ்து தாழ்ந்த வஸ்து இவைகளைப்பற்றிய ஜ்ஞானம் உண்டாகி எல்லோருக்கும் ஈஶ்வரனான பகவானுடைய திருவடிகளை உபாயமாகவும் உபேயமாகவும் (ப்ரயோஜனமாகவும்) பற்றி உஜ்ஜீவிக்க வேண்டும். உயர்ந்த தத்வமாவது தன்னைத் தவிர மற்ற எல்லா வஸ்துக்களுக்கும் ஆதாரமாயும், அவைகளை நியமிப்பவனாயும் (உத்திரவு செய்பவனாயும்), அதனால்வரும் ப்ரயோஜனத்தை அனுபவிப்பவனாயும் இருக்கும் ஶ்ரிய: பதி (லக்ஷ்மிக்குப் பர்த்தா). இவன் தானே(மற்றொருவருடைய உபதேசம் முதலியவைகளன்றிக்கே) எல்லாவற்றையும் அறிந்தவனாய், எல்லாவிதமான கார்யத்தையும் நடத்தக்கூடிய ஶக்தியையுடையவனாய், மிகுந்த கருணையையுடையவனாய், எல்லோராலும் ஶரணமாக அடையத்தகுந்தவனாய், மிகுந்த ஔதார்ய குணத்தை உடையவனாய், மோக்ஷத்தைக் கொடுப்பவனாய், முக்தர்களினால் அனுபவிக்கப்படுமவனாய், பரம், வ்யூஹம் விபவம், ஹார்த்தம், அர்ச்சை என்கிற ஐந்து விதங்களாயும், பாபத்தைப் போக்கடிக்கக்கூடியவைகளாயும் த்யானத்திற்கு ஸுலபமாய் விஷயமாகக்கூடியவைகளாயும், ப்ரக்ருதி ஸம்பந்த மற்றவைகளாயுமிருக்கிறமங்களகரமான திருமேனியுடன் கூடியவனாய் இருக்கும். இவனைவிட மற்றவை தாழ்ந்த தத்வம் என்னப்படுகிறது. இது சேதனம் (அறிவை உடையது) என்றும், அசேதனம் (அறிவு இல்லாதது) என்றும் இரண்டு வகையாய் இருக்கும். அறிவுடன் கூடிய தாழ்ந்த தத்வமாவது அளவிடப்பட்டதாய் நான் என்னும் பதத்திற்கு அர்த்தமானது. இதற்கு இதர வஸ்துக்களை அறியும் தன்மை, சில கார்யங்களைச் செய்யக்கூடும் தன்மை, ஸுகதுக்கங்களை அனுபவிக்கும் தன்மை இவைகள் பகவானுக்கு வசப்பட்டிருக்கும் (அதாவது விதிக்கப்பட்டும் மறுக்கப்பட்டும் இருக்கும் ஶாஸ்திரங்களை அறிகையும், அதின்படி நடக்கையும், அதினால் உண்டாகிய ஸுகதுக்கங்களை அனுபவிக்கையும் முன் ஜன்மங்களில்செய்த கர்மங்களை

அனுஸரித்து பகவானுடைய நிக்ரஹம் (கோபம்), அனுக்ரஹம் (க்ருபை) இவைகளுக்கு வசப்பட்டு நிற்கும்). இது பத்தர், முக்தர், நித்யர் என்கிற பிரிவாலே மூன்று விதம். பத்தராவார் ஸம்ஸாரத்திலிருக்குமவர்கள். முக்தராவார் (சிலகாலம் ஸம்ஸாரத்தில் இருந்து, உபாயத்தைச் செய்து அத்தால்) ஸம்ஸாரம் கழிந்தவர்கள். நித்யராவார் ஒரு காலத்திலும் ஸம்ஸாரமில்லாத நித்ய ஸூரிகள். அசேதனமாவது அறிவில்லாத வஸ்து. இது த்ரிகுணம் (ப்ரக்ருதி) என்றும், காலம் என்றும், ஶுத்தஸத்வம் என்றும், தர்மபூதஜ்ஞானம் என்றும் நாலு விதமாயிருக்கும். த்ரிகுணமாவது ஸத்வம் ரஜஸ் தமஸ் என்கிற மூன்று விதமானகுணங்களுக்கும் ஆதாரமாகிய வஸ்து. இது ப்ரக்ருதி விக்ருதி என்கிற பிரிவினால் (அதாவது மூலப்ரக்ருதி, மஹத், அஹங்காரம், ஐந்து தன் மாத்திரைகள், பதினொரு இந்திரியங்கள், ஐந்து பூதங்கள் (பூமி, ஜலம், காற்று, நெருப்பு, ஆகாசம்) என்கிற பிரிவினால்) இருபத்தி நாலுவகையாய் பகவானுக்கு லீலாரஸத்தை உண்டாக்குவதற்காக ஜீவாத்மாக்களுக்கு ஶரீரம், இந்திரியங்கள் இவை முதலியவைகளாக மாறி பகவானுடைய ஸ்வரூபத்தை மறைப்பது, விபரீதமான ஜ்ஞானத்தை உண்டாக்குவது, தன்னிடத்திலேயே போக்யம் என்கிற புத்தியை உண்டாக்குவது முதலியவற்றைச் செய்யும். காலமாவது விநாடி, நாழிகை, முகூர்த்தம், யாமம், தினம், வாரம், பக்ஷம், மாதம், ருது, அயனம், வருஷம் முதலிய பிரிவுகளை உடையதாய், எல்லாக் காரியத்திற்கும் முக்கிய கர்த்தாவான பகவான் தன்னாலே (காலத்தினால் பரிணமம் உடைய இந்த விபூதியில் நடக்கிற ஸ்ருஷ்டி முதலிய கார்யங்களுக்கு) ஒத்தாசைக் காரணமாக அங்கீகரிக்கப்பட்டதாயிருக்கும். ஶுத்தஸத்வமாவது ரஜஸ், தமஸ் இவைகள் இல்லாமல் ஸத்வம் மாத்திரத்திற்கு ஆஶ்ரயமான வஸ்து. இது பகவானுக்கும் நித்யர்களுக்கும் முக்தர்களுக்கும் ஶரீரமாகவும் சத்ரம் சாமரம் முதலியவைகளாகவும் மாறுதலையடைந்து ஆஶ்சர்யமாயும் போக்யமாயுமிருக்கும். தர்மபூத ஜ்ஞானமாவது உயர்ந்த ஆத்மா (ஈஶ்வரன்) தாழ்ந்த ஆத்மா (ஜீவன்) இவர்களுக்கு தங்கள் தங்கள் ஆத்மாவையும், தங்களைவிட வேறுபட்ட வஸ்துக்களையும் ப்ரகாஶம் செய்யக்கூடியதான ஜ்ஞானம். இந்த ஜ்ஞானத்தினாலேயே ஆத்மாக்களுக்கு (ஈஶ்வரனுக்கும் ஜீவாத்மாக்களுக்கும்)

இதர வஸ்துக்களை அறியக்கூடிய தன்மை, சில கார்யங்களில் கர்த்தாவாயிருக்கும் தன்மை, ஸுகதுக்கங்களை அனுபவிக்கும் தன்மை இவைகள் உண்டாகின்றன. பத்தருக்கு ஶாஸ்திரத்தில் மறுக்கப்பட்டிருக்கும் கார்யங்களையும், காம்யகர்மங்களையும் செய்கை ஸம்ஸாரத்திற்குக் காரணம். உயர்ந்த தத்வம் தாழ்ந்த தத்வம் இவைகளைப்பற்றிய ஜ்ஞானத்தை அடைந்து பலம் முதலியவைகளில் ஆசையில்லாமல் (அதாவது ஸாத்விகத்யாகத்துடன்) கர்மங்களை செய்கை மோக்ஷத்திற்குக் காரணம். பத்தன் இதற்கு முன்னால் செய்த ஸம்ஸார பந்தங்களுக்குக் காரணமான கர்மங்களுக்கு எல்லாம் தன்னுடைய ஜ்ஞானம் ஶக்தி முதலியவைகளுக்குத் தகுந்தபடி ப்ரபத்தி பக்தி என்கிற ப்ராயஶ்சித்தத்தைச் செய்து, இதற்குமேல் புத்தி பூர்வகமான அபராதங்களைப் பண்ணாமல், ஏற்கனவே பலம் கொடுக்க ஆரம்பித்த கர்மத்தையும் ஒரு வழியாலே (அதாவது பக்தியோக நிஷ்டன் அனுபவத்தாலும், அவதார ரஹஸ்யத்தைச் சிந்தனை பண்ணுவதினாலும், ப்ரபன்னன் ப்ரபத்தியின் ப்ரபாவத்தினாலேயும்) போக்கடித்து மோக்ஷத்தை யடைவான்.

முத்திக்கருள் சூட மூன்றைத் தெளி முன்னம்
இத்திக்கால் எற்கு மிதம்.

[ப - ரை.] முத்திக்கு - மோக்ஷத்திற்குக் காரணமாகிய, அருள் - பகவானுடைய க்ருபையை, சூட - ஶிரஸா (தலையினால்) வகிக்க (ஏற்றுக்கொள்ள), முன்னம் - முதலில், மூன்றை - மூன்று தத்வங்களை, தெளி - நன்றாகத் தெரிந்துகொள், இத்திக்கால் - இந்த வழியினால், தத்வஜ்ஞான மூலமாக என்றபடி, இதம் - உபாயம், எற்கும் - அனுரூபமாக உண்டாகும்.

சீரார் தூப்புல் திருவேங்கடமுடையான் திருவடிகளே சரணம்.

திருவஹீந்திரபுரம் சேட்லூர் வித்வான் பகவத்விஷயம்

பண்டிதபூஷணம் மஹாமஹோபாத்யாய

ஸ்ரீ உ.வே. நரஸிம்மாசார்யர் ஸ்வாமியின்

ஸ்ரீமத் தத்வபதவீ தமிழ்மொழி பெயர்ப்பு முற்றிற்று.

ஸ்ரீ:

சீரார் தூப்புல் திருவேங்கடமுடையான் திருவடிகளே சரணம்.

ஸ்ரீமந் நிகமாந்த மஹாதேசிகன் அருளிச்செய்த

ஸ்ரீமத் ரஹஸ்ய பதவிக்கு

திருவஹிந்திரபுரம் சேட்லூர் வித்வான் பகவத்விஷயம்

பண்டித பூஷணம் மஹாமஹோபாத்யாய

ஸ்ரீ உ.ப. வே நரஸிம்மாசார்யர் ஸ்வாமியின்

தமிழ் மொழிபெயர்ப்பு.

𑌶𑍍𑌰𑍀𑌮𑌾𑌨𑍍 𑌵𑍇𑌙𑍍𑌕𑌟𑌨𑌾𑌥𑌾𑌰𑍍𑌯𑌃 𑌕𑌵𑌿𑌤𑌾𑌰𑍍𑌕𑌿𑌕𑌕𑍇𑌸𑌰𑍀 ।
𑌵𑍇𑌦𑌾𑌨𑍍𑌤𑌾𑌚𑌾𑌰𑍍𑌯𑌵𑌰𑍍𑌯𑍋 𑌮𑍇 𑌸𑌨𑍍𑌨𑌿𑌧𑌤𑍍𑌤𑌾𑌂 𑌸𑌦𑌾 𑌹𑍃𑌦𑌿 ॥
𑌰𑌾𑌮𑌾𑌨𑍁𑌜𑌦𑌯𑌾𑌪𑌾𑌤𑍍𑌰𑌂 𑌜𑍍𑌞𑌾𑌨𑌵𑍈𑌰𑌾𑌗𑍍𑌯𑌭𑍂𑌷𑌣𑌂 ।
𑌶𑍍𑌰𑍀𑌮𑌦𑍍𑌵𑍇𑌙𑍍𑌕𑌟𑌨𑌾𑌥𑌾𑌰𑍍𑌯𑌂 𑌵𑌨𑍍𑌦𑍇 𑌵𑍇𑌦𑌾𑌨𑍍𑌤𑌦𑍇𑌶𑌿𑌕𑌂 ॥

சீரொன்று தூப்புல் திருவேங்கடமுடையான்
பாரொன்றச் சொன்ன பழமொழியுள் — ஓரொன்று
தானே யமையாதோ தாரணியில் வாழ்வார்க்கு
வானேறப் போமளவும் வாழ்வு.

திருமந்திராதிகாரம்.

அநாதியான காலமாக ஸம்ஸாரத்தில் உழன்று போரும் ஜீவாத்மாக்களுடைய கர்மங்கள் நிவ்ருத்தி அடைவதற்காக வேதாந்த ஶாஸ்திரங்கள் (ஈஶ்வரன், ஜீவாத்மா, அசேதனம் என்று) மூவகைப்பட்ட தத்வங்களையும், (ஸம்ஸாரத்தை நீக்கிக் கொள்ளுவதற்குக் காரணம் என்று விதிக்கப்படுகிற பக்தி ப்ரபத்தி என்கிற) உபாயங்களையும், (அத்தால் அடையப்படும்) மோக்ஷத்தையும் சொல்லும். அவற்றை

திருமந்திரம், த்வயம், சரமஶ்லோகம் என்னப்படும் மூன்று ரஹஸ்யங்கள் சுருக்கமாக ப்ரகாஶம்செய்யும். இவற்றில் திருமந்திரம் எல்லாவற்றிற்கும் ஸங்க்ரஹம். இது தான் மூன்று பதங்களாய், எட்டு திருவக்ஷரங்களாய் இருக்கும். இதில் முதல் பதமான ப்ரணவம் மிகவும் ஸாரமாக அறியவேண்டியவற்றின் சுருக்கம். இது மூன்று பதமாய் மூன்று அக்ஷரமாய் இருக்கும். இதில் முதல் அக்ஷரம் எல்லா வஸ்துக்களுக்கும் காரணமானவனாய், எல்லாவற்றையும் காப்பாற்றுமவனாய், எப்பொழுதும் இருக்கிறதாயும், ஒரு காரணத்தினால் உண்டாகியதில்லாமலும் இருக்கிற ஶேஷத்வத்திற்கு (அடிமையாயிருப்பதற்கு) ப்ரதி ஸம்பந்தியான (எதிர்த் தலையாய் இருப்பவனான) ஸ்ரிய:பதியைச் சொல்லுகிறது. இதில் (எறிலோபித்துக் கிடக்கிற) நான்காம் வேற்றுமை ஶேஷத்வமாகிற ஸம்பந்தத்தைக் காட்டுகிறது. நடுவில் இருக்கும் அக்ஷரம் இந்த ஸம்பந்தத்தை மற்றொருவரோடு துவக்கற (ஸம்பந்தம் இல்லாமல் இருக்கும்படி) கட்டுப்படுத்துகிறது. மூன்றாவது அக்ஷரம் இந்த ஸம்பந்தத்திற்கு இருப்பிடமாய், ரக்ஷிக்கப்படக்கூடியவனாய், ஜ்ஞானம் ஆநந்தம் இவற்றை ஸ்வரூபமாகவும் குணமாகவும் உடையவனாய், அணுவாய் (மிகவும் ஸூக்ஷ்மமாய்) தேஹம் முதலியவைகளைவிட வேறுபட்டவனாயிருக்கும் ஜீவாத்மாவைச்சொல்லுகிறது. ஆக இப்ரணவத்தினால் 'கண்ணபுரமொன்றுடையானுக்கடியேனொருவர்க்குரியேனோ' (அத்விதீயமான ஸ்தலமாகிய திருக்கண்ணபுரம் என்கிற திவ்யதேஶத்தைத் தனக்கு வாஸஸ்தானமாக உடைய ஸ்ரிய:பதிக்கு தாஸபூதனாகிய நான் மற்றொருவனுக்குத் தாஸபூதனாகத் தகுந்தவனோ) என்கிறபடியே இந்த ஜீவாத்மா பகவானைத்தவிர வேறுஒருவருக்கும்ஶேஷமாகஇருக்கயோக்யதைஇல்லாமல் பகவானுக்கே ஶேஷபூதன் என்றதாயிற்று. நடுப்பதமான நமஸ்ஸு இரண்டு எழுத்தாய் இரண்டுபதமாய் நான் எனக்கு உரியேனல்லேன், என்னுடைய கார்யத்திற்கு அயலானை எதிர்பாராமல் ஸ்வதந்திரனும் அல்லேன் என்கிறது. இங்கே பாகவதர்களுக்கு ஶேஷ பூதன் என்பதும் பலிக்கிறது (ஏற்படுகிறது). இந்த நமஸ்ஸுக்கு ஶரணாகதியிலும் தாத்பர்யம். எல்லா அநிஷ்டங்களும் நிவ்ருத்திக்கவேணும் என்று ப்ரார்த்திப்பதைச் சொல்லுகிறதாகவுமாம். இப்படி இந்த நம: என்னும் பதத்திலேயே தத்வம், ஹிதம், புருஷார்த்தம் இவைகள் சொல்லப்படுகின்றன என்பதும் உண்டு. நாராயணஶப்தம் நாரங்

களுக்கு இருப்பிடம் என்றும், நாரங்களைத் தனக்கு இருப்பிட மாக உடையவன் என்றும் எல்லாவற்றிற்கும் ஆதாரமாயிருப் பது முதலியவற்றுடன் கூடிய ஶ்ரியஃபதியைச் சொல்லுகிறது. இதில் நான்காம் வேற்றுமை ஶேஷத்வத்தை முன்னிட்டுக்கொண்டு அதின் பலமான கைங்கர்யத்தைக் காட்டுகிறது. இத்தால் 'ஒழிவில் கால மெல்லாமுடனாய் மன்னி வழுவிலா வடிமைசெய்யவேண்டு நாம்'(விட் டுப்போவது என்பது இல்லாத அதாவது இடைவிடாத எல்லாக் காலத்திலும் ஸமீபத்திலேயே ஸ்திரப்ரதிஷ்டிதனாய் (வேறூன்றி நின்று)வழுவுதல்இல்லாத எல்லாக் கைங்கர்யங்களை நாம் செய்யவேண் டும்) என்றதாயிற்று. 'அகாரார்த்தாயைவ' என்கிற ஶ்லோ கத்தை இங்கே அநுஸந்திப்பது. இது அஷ்டஶ்லோகியின் மூன் றாவது ஶ்லோகம். இதின் அர்த்தம்—நான் அகாரத்திற்கு அர்த்த மான பகவானுக்கு ஶேஷபூதன். முழுமையும் எனக்குச் சேஷபூதனல்ல, ஜீவாத்மாக்களின் ஸமூஹங்கள் நாரங்கள் என்னப் படுகின்றன, நித்யங்களாகிய அந்த நாரங்களுக்கு ஆதாரம் என்று நாராயண என்னும் பதம் எந்த ஶ்ரியஃபதியைச் சொல்லிற்றோ அப் படிப்பட்ட ஶ்ரியஃபதியின் பொருட்டு எல்லாக் காலங்களிலும் எல்லா இடங்களிலும் எல்லாத் தசைகளிலும் எனக்கு ஸ்வபாவத் தினால் ஏற்பட்ட கைங்கர்யங்களின் அனுஷ்டானங்கள் உண்டாக வேண்டும்—என்பது.

திருமந்திராதிகாரம் முற்றிற்று.

183664

த்வயாதிகாரம்.

இப்படித் திருமந்திரத்தில் சுருக்கிச் சொல்லப்பட்டவைகளான தத்வம் ஹிதம் புருஷார்த்தம் இவைகளை விஶதமாகச் சொல்லு கிறது த்வயம். இதில் முன்பாகம் ஒரு வாக்யமாய் உபாயத்தைச் சொல்லுகிறது. மேல் பாகம் இரண்டு வாக்யமாய் உபேயத்தை (அடையவேண்டிய ப்ரயோஜனத்தை)ச் சொல்லுகிறது. இவை ஒவ்வொன்றும் மூன்று பதமாயிருக்கும். முன் பாகத்தில் முதல் பதம் மூன்று பதங்கள் கூடின ஒரு பதமாயிருக்கும். இதில் ஸ்ரீமத் என் னும் ஶப்தம் எல்லோராலும் ஆஶ்ரயிக்கப்படக்கூடியவளாய் 'அகல கில்லேன்' (ஒரு க்ஷணகாலமும் பிரிந்திருக்க ஸாமர்த்தியமுடையவ

ணல்லேன்) என்கிறபடியே தன்னை அடைந்திருக்கிற பெரிய பிராட்டியாரோடு பிரிவற்றவன் என்கிறது. நாராயண ஶப்தம் 'நிகரில் புகழாய்' (ஒப்பில்லாத கல்யாண குணங்களை உடையவனே) என்றிவை முதலியவைகளில் சொன்ன *வாத்ஸல்யம், ஸ்வாமித்வம் ஸௌஶீல்யம் ஸௌலப்யம் முதலியவைகளை உடைய ஸர்வேஶ்வரனைச் சொல்லுகிறது. சரணஶப்தம் பகவானுடைய விஷயத்தில் க்ருபையை வ்ருத்திசெய்வது முதலியவற்றிற்காக தாஸபூதன்பற்றும் துறையான திருவடிகளைக் காட்டுகிறது. ஶரணம் என்கிற பதம் திருவடிகளுடைய உபாயமாய் இருக்கும் தன்மையைச் சொல்லுகிறது. ப்ரபத்யே என்கிற பதம் ஒன்றும் இல்லாதவனாகிய இந்த அதிகாரி பகவானுடைய திருவடிகளை உபாயமாகக்கொண்டு மஹா விஶ்வாஸம் முதலிய அங்கங்களுடன் பரந்யாஸம் பண்ணுகிறபடியை ப்ரகாசிப்பிக்கிறது. ஸ்ரீமதே என்கிற பதம் அடைவிக்கிறவனான நாராயணன் அடையப்படவேண்டிய ப்ரயோஜனமாய்க் கொண்டு கைங்கர்யத்திற்கு உத்தேஶ்யனாகும்பொழுது தன் பத்னியாகிய லக்ஷ்மியுடன் கூடியிருக்கும்படியைக் காட்டுகிறது. இக்குற்ற நாராயண என்னும் பதம் எல்லாவிதஸ்வபாவங்களுடன் கூடினவனாய்க்கொண்டு எல்லையில்லாத போக்யனையும் எல்லோருக்கும் ஶேஷியுமான பகவானைச் சொல்லுகிறது. இதின் நான்காம் வேற்றுமையிலும் திருமந்திரத்தில் போலே கைங்கர்யத்தை ப்ரார்த்திப்பதைக் கண்டுகொள்ளுவது, இந்தக் கைங்கர்யம் ஒருவிதமான விரோதிகளும் இல்லாமல் இருக்கும்படியை இந்நமஸ்ஸு காட்டுகிறது. லக்ஷ்மியுடன் கூடின நாராயணனுடைய திருவடிகளில் களையற்ற நித்ய கைங்கர்யம் பெறுகைக்கு லக்ஷ்மியுடன் கூடிய நாராயணனுடைய திருவடிகள் இரண்டையும் ஶரணமாக பற்றுகிறேன் என்று இதில் திரண்ட பொருள்.

த்வயாதிகாரம் முற்றிற்று.

---

*வாத்ஸல்யமாவது ஆஶ்ரிதர்களுடைய தோஷத்தைப்பாராமல் இருப்பதற்குக் காரணமான ப்ரீதிவிஶேஷம். ஸ்வாமித்வமாவது யஜமானனாயிருக்கை. ஸௌஶீல்யமாவது மிகவும் உயர்ந்தவனாயிருந்தும் மிகவும் தாழ்ந்தவர்களோடு வ்யத்யாஸமில்லாமல் கலந்திருக்கும் தன்மை. ஸௌலப்யமாவது ஸுலபமாக எல்லோரும் ஆஶ்ரயிக்கலாம்படி இருக்கும் தன்மை.

சரமஸ்லோகாதிகாரம்.

இப்படி திருமந்திரத்திலும் த்வயத்திலும் ப்ரகாசித்த உபாயத்துக்கு அகிஞ்சநர்களுக்கே அதிகாரம், வேறு ஒன்றையும் அபேக்ஷிக்கிறது இல்லை என்கிற விசேஷங்களைக் காட்டிக்கொண்டு விதிவாக்யமாக இருந்துகொண்டு ஸ்ருதிகளில் ப்ரதிபாதிக்கப்பட்டிருப்பதை விசதமாகக் காட்டுகிறது சரமஸ்லோகம். இதுதான் மூன்று வாக்யமாய் பனிரண்டு பதமாயிருக்கும். இப்படி இந்த மூன்று ரஹஸ்யங்களும் மேல்மேல் பதங்கள் இரட்டிப்பாய் ஒன்றை ஒன்று விஸதமாக்குவதாக இருக்கும். இந்த ஸ்லோகத்தில் முதல் வாக்யம் உபாயத்தைப்பண்ணும்படி விதிக்கிறது. நடுவாக்யம் பலத்தை ப்ரதி பாதிக்கிறது. கடைசி வாக்யம் க்ருத க்ருத்யனாயிருக்கும் தன்மை முதலியவற்றைச் சொல்லுகிறது. எல்லாத் தர்மங்களையும்விட்டு என்கிற இரண்டு பதங்களாலே 'நின்னிலங்கு பாதமன்றி மற்றோர் பற்றிலேனெமீசனே' (ஓ! ஸ்வாமியே! உம்முடைய ப்ரகாசித்துக் கொண்டிருக்கிற திருவடிகளைத் தவிர வேறு ஒரு ஆஸ்ரயிக்கக் கூடிய வஸ்து இல்லாதவன்) என்கிறபடியே தன்னுடைய இஷ்டமான பலம் ஸித்திப்பதற்குவேறுஉபாயம்இல்லாமல் இருக்கையாகிற அதிகாரவிசேஷத்தையாதல், ப்ரபத்தியினுடைய மற்றொரு தர்மத்தை எதிர்பாராத தன்மை முதலியவைகளையாதல் சொல்லுகிறது. என்னை ஒருவனை என்கிற இரண்டு பதங்களாலே ஸௌலப்யம் முதலிய குணங்களுடன் கூடினதாயும் முக்யமான உபாயமா யிருக்கும் தன்மை, வேறு ஒன்றை எதிர்பாராதிருத்தல், எல்லாப் பலத்தையும் கொடுக்கும் தன்மை, முதலியவைகளுடன் கூடியதாயும் இருக்கிற ஸித்த தர்மத்தை (பகவானைக்) காட்டுகிறது. ஸரணமாகப் பற்று என்கிற இரண்டு பதங்களாலே மஹா விஸ்வாஸம் முதலிய அங்கங்களுடன் கூடிய பரந்யாஸத்தை விதிக்கிறது. நான் உன்னை என்கிற இரண்டு பதங்களினால் நம்மால் ஸமர்ப்பிக்கப்பட்ட பரத்தை அங்கீகாரம் பண்ணினவனாய் எல்லாவித ஸக்தியையுடையவனான பகவானையும், பகவானிடத்தில் வைக்கப்பட்ட பரத்தை உடையவனாய் சாதகபக்ஷியின் நடத்தை போன்ற நடத்தையை உடையவனான ஜீவாத்மாவையும் சொல்லுகிறது. எல்லாப்பாபங்களில் நின்றும் விடுவிக்கக் கடவேன் என்கிற இரண்டு பதங்களாலே கைங்கர்யத்திற்கு விரோதிகளை மிகுதியில்லா

மல் கழிக்கும்படியைச் சொல்லுகிறது. ஶோகிக்கவேண்டாம் என்கிற இரண்டு பதங்களாலே ஆஶ்ரயிக்கும் படியான வேறு இடம் இல்லாமல் துக்கித்துக் கொண்டிருந்த முன்தசையை மாற்றி 'நிஸ்ஸம்ஶயஸ்ஸுகமாஸ்வ' (ஸம்ஶயம் கொஞ்சமேனும் இல்லாமல் ஸுகமாக இரு) என்றருளிச் செய்த மேல்வரும் தசையை உபலக்ஷிக்கிறது (குறிக்கிறது). த்வயத்தில் கீழ்மேல் பாகங்களுக்கு இதில் கீழ்மேல் பாதிகள் சேர்த்தியாய் இருக்கின்றன.

சரமஶ்லோகாதிகாரம் முற்றிற்று.

மூன்றில் ஒருமூன்று மூவிரண்டு மூந்நான்கும்
தோன்றத் தொலையும் துயர்.

[ப - ரை.] மூன்றில் - ரஹஸ்யத்ரயத்தில், ஒரு - ஒப்பற்ற மூன்றும் - மூன்று பதங்களடங்கிய திருமந்திரமும், மூவிரண்டும் - ஆறுபதங்களையுடைய த்வயமும், மூந்நான்கும் - பனிரண்டு பதங்களடங்கிய சரமஶ்லோகமும், தோன்ற - அர்த்தத்துடன் ப்ரகாஶிக்க, துயர் - துக்கங்கள், தொலையும் - நசித்துவிடும்.

இதி தத்த்வத்ரயஸ்யைஷா ரஹஸ்யத்ரிதயஸ்ய ச ।
பத்ததிர் வேங்கடேஶேந ப்ரத்யக் ப்ராசீ ப்ரதர்ஶிதா ॥

[ப - ரை] ஏஷா - இந்த, தத்த்வத்ரயஸ்ய - சேதனம், அசேதனம், ஈஶ்வரன் என்கிற மூன்று தத்வங்களினுடையவும், ரஹஸ்யத்ரிதயஸ்ய ச - திருமந்திரம் த்வயம் சரமஶ்லோகம் என்கிற மூன்று ரஹஸ்யங்களினுடையவும், ப்ரத்யக் ப்ராசீ - கிழக்கு மேற்காக இருக்கிற, அன்றிக்கே ப்ரத்யக் என்கிற ஜீவாத்மாவை ப்ரகாஶம் செய்கிற, பத்ததீ - மார்க்கமானது, வேங்கடேஶேந - வேங்கடேஶன் என்கிற திருநாமத்தையுடைய ஸ்ரீதேசிகனால், இதி - இப்படி, ப்ரதர்ஶிதா - காட்டப்பட்டது.

ஶ்ரீரங்கஶ்ரீர்த்தவ்ருஷா த்ரிப ப்ரிபமுகேஷு
ஸ்தாநேஷு ஸ்திரவிபவா பவத்ஸ்வயந்தா ।
ஶ்ருங்கம் வாத விப்ரதவேஶிவக்ஷா
ஸந்நிதாஸ்யா பவது நாகம் வயேவ ஸந்நிதாக ॥

[ப - ரை] வரத - பக்தர்களுக்கு அபீஷ்டங்களைக் கொடுக்கும் பகவானே! ஸ்ரீரங்க - ஸ்ரீரங்கம், வரதவ்ருஷாத்ரி - ஹஸ்திகிரி வேங்கடாசலம், ப்ரமுகேஷு - இவை முதலான, ஸ்தானேஷு - உகந்தருளின திவ்ய தேசங்களில், தவ ஸபர்யா - உம்முடைய திருவாராதனம், ப்ரசஸ்யா - அதிகமான, தவ தயா ஏவ - உம்முடைய க்ருபையினாலேயே, கல்பம் - கல்பகாலம் வரையிலும், வியுத - போக்கடிக்கப்பட்ட, த்வேஷிபக்ஷா - சத்ருக்களினுடைய பக்ஷத்தை உடையதாகவும், ஸ்திரவிபவா - அழிவில்லாத ஐஸ்வர்யங்களோடு கூடினதாகவும், ப்ரபூயாத் - இருக்கவேண்டும்.

சீரார்தூப்புல் திருவேங்கடமுடையான் திருவடிகளே சரணம்.

திருவஹீந்திரபுரம் சேட்லூர் வித்வான் பகவத் விஷயம்

பண்டித பூஷணம் மஹாமஹோபாத்யாய

ஸ்ரீ. உப. வே. நரஸிம்மாசார்யர் ஸ்வாமியின்

ஸ்ரீமத் ரஹஸ்ய பதவீ தமிழ் மொழிபெயர்ப்பு முற்றிற்று.

ஸ்ரீ:

ஸ்ரீமதே வேதாந்த குரவே நம:

ஸ்ரீரங்கம் வேதாந்த தேசிக வித்யா வித்யாபிவிருத்தி ஸபை.

ஜ்ஞாநாநந்தமயம் தேவம் நிர்மல ஸ்படிகாக்ருதிம் |
ஆதாரம் ஸர்வவித்யாநாம் ஹயக்ரீவமுபாஸ்மஹே ||

ஸ்ரீமத் பகவத் பாகவத அபிமான சீலர்களாகிய
பெரியோர்களுக்கு விண்ணப்பம்:—

ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்தமானது பூர்வத்தில் பகவானே ஹம்ஸ மத்ஸ்ய ஹயக்ரீவ நாராயண கீதாசார்யராகவும்வந்து ப்ரவர்த்திப்பித்ததாய், பின்பு மஹாத்மாக்களாகிய டங்கர் திரமிடர் குஹதேவர் முதலான மஹரிஷிகளாலும் மயர்வற மதிநலம் அருளப்பெற்ற ஆழ்வாராதிகளாலும் ஸ்தாபிக்கப்பட்டு, பின்னர் ஸ்ரீமந்நாதமுநிகள் ஸ்ரீ ஆளவந்தார் ஸ்ரீபாஷ்யகாரர் ஸ்ரீமத் வேதாந்த தேசிகன் முதலிய ஆசார்ய ஸ்ரேஷ்டர்களாலும் ப்ரவசனம் செய்யப்பட்டு வந்தது. இது உலகமறிந்த விஷயம். மேலும் ஸம்பிரதாய ஆசார்யர்களாலும் மடாதிபதிகளாலும் இச்சித்தாந்த மபிவிருத்தியடையச் செய்யப்பட்ட கைங்கர்யங்கள் அநேகம். இவ்வாறு ஒப்பு உயர்வற்ற சித்தாந்தத்தை அபிவிருத்தி செய்வதற்காக செய்யவேண்டும் சிறந்த கைங்கர்யங்கள் பலவுள. அவற்றுள் முக்யமானவை:— எல்லாருக்கும் ஜ்ஞாநாபிவிருத்தி விஷயமாக வித்யாசாலை வைத்தலும், ஆழ்வாராசார்யர்கள் அருளிச்செய்த கிரந்தங்களை ஸுலபமாய் எவருமுணரும்படி தமிழில் எளிய வசன நடையில் மாத சஞ்சிகையாகவும் பூரா புஸ்தகங்களாகவும் அச்சிட்டு வெளிப்படுத்த வேண்டுமென்பதும், பண்டித ஸ்வாமிகளைக் கொண்டு ஒவ்வொரு கிராமங்களிலும் ஸம்ப்ரதாய ப்ரவசனம் செய்து வித்யாசாலை முதலியவைகளை ஏற்படுத்துவதுமான மூன்று கைங்கர்யங்களும் ராயகுரு கோடி கன்னிகாதானம் சிம்மள ராஜகுரு ஸ்ரீ உ.வே. அய்யாவேங்கட தாதாசார்ய ஸ்வாமிகள் திருவருள்கூர்ந்து பாகவதோத்தமராகிய ஸ்ரீமான் வேணுகோபாலசாமி நாயுடு அவர்களோடு அடியேனையும் இன்னும் சிலரையுஞ் சேர்த்து பெரியகோயிலென்னும் திருவரங்கமாநகரில் கீழ்கண்ட கைங்கர்யங்களை செய்யும்படி நியமித்தருளினர். இதில் முதன்மையான வித்யாசாலை வைப்பது ஒருவாறு திருவரங்கமாநகரில் ஸ்தாபிக்கப்பட்டு காலக்ஷேபம் செய்யவரும் பாகவதர்களுக்கு எமது ஆசார்யஸ்வாமிகளாகிய ராயகுரு

3664